குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09–ஆம் நாள் திங்கட்கிழமை

<u>குற்றவியல் பல்வகை மனு எண்.244/2026</u>

ஆனந்தன், வயது 37/2026
த/பெ. அப்பாவு,
மெயின்ரோடு, மாப்படுகை,
மயிலாடுதுறை. ..... மனுதாரர்

// எதிர் //

காவல் ஆய்வாளர்,
மயிலாடுதுறை காவல் நிலையம்
குற்ற எண்.1490/2021
ச/பி. 379 இதச
r/w 21(1) M.M. Act ..... குற்றமுறையீட்டாளர்

// எதிர் //

ஆனந்தன் ....... எதிரி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 25.02.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மனோஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**// உத்தரவு//**

மனுதாரர் இம்மனுவினை பிரிவு 497, 503 BNSS ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர் TN 51 F 2083 என்ற பதிவெண் கொண்ட Bolero Camper 120 SC XL என்ற நான்கு சக்கர வாகனத்தை பயன்படுத்தி வந்ததாகவும், மேற்படி வாகனத்தை விவசாய வேலை மற்றும் காய்கறிகள் ஏற்றி வருவதற்காக பயன்படுத்தி வந்ததாகவும், கடந்த 28.06.2021 ம் தேதியன்று வாகனம் மனுதாரர் வீட்டில் இருக்கும்போது மேற்படி போலிசார் பண்ணை தெருவில் மனுதாரர் வாகனத்தை சவுடு மண் கடத்துவதாக கூறி பொய்யாக வழக்கு பதிவு செய்து மனுதாரர் வாகனத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்பொழுது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் இருந்து வருவதாகவும், மேற்படி நான்கு சக்கரம் வாகனம் காவல் நிலையத்தில் நிறுத்தி

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.09 19:21:40 +0530

வைக்கப்பட்டிருப்பதால் மழை, வெயில் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு அதன் முக்கிய பாகங்கள் உபயோகமற்றதாகிவிடும் எனவும், மேற்படி வாகனத்தை ஒப்படைத்தால் நல்ல முறையில் பாதுகாத்து எந்தவித மாற்றமும் செய்யாமல் நீதிமன்றம் குறிப்பிடும் தேதியில் ஆஜர்படுத்த தயாராக உள்ளதாகவும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரருக்கு சொந்தமான TN 51 F 2083 என்ற பதிவெண் கொண்ட Bolero Camper 120 SC XL என்ற நான்கு சக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க மயிலாடுதுறை காவல் ஆய்வாளருக்கு உத்தரவு செய்தும், மேற்படி TN 51 F 2083 என்ற பதிவெண் கொண்ட Bolero Camper 120 SC XL என்ற நான்கு சக்கர வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிடவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த பதில் அறிவிப்பு</u>**

இவ்வழக்கின் தடயத்தை மனுதாரரிடம் கொடுத்தால் அதை உருக்குலைக்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ நேரிடும் அதனால் வழக்கின் புலன் விசாரணை தேக்க நிலை ஏற்படும் என்பதால் வழக்கின் தடயத்தை மனுதாரரிடம் கொடுக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் கோரியவாறு TN 51 F 2083 என்ற பதிவெண் கொண்ட Bolero Camper 120 SC XL என்ற நான்கு சக்கர வாகனம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பது இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய அம்சமாகும்.

5. **தீர்வு:** வழக்கு சான்றாவணங்களும், மனு மற்றும் பதில் அறிவிப்பு பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தனது வாகனத்தின் பதிவு சான்றிதழின் நகலை மனுவுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளார். பதிவு சான்றிதழில் அதன் உரிமையாளர் ஆனந்தன், த/பெ. அப்பாவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் வசம் வாகனத்தை ஒப்படைப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுதாரர் வசம் வாகனத்தை ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பு நெறி Sunder Bai Amballal Desai Vs The State of Gujarat (2002 SUPP(3) SC of 39 என்னும் வழக்கில் பின் வருமாறு கூறியுள்ளது. The object and Scheme of the various provision of the court appear to be that where the property which has been this object matter of an offence is seized by the police. It ought not to be retained in the custody of the court or of the police for any time longer than what is absolutely necessary. மேற்கண்ட தீர்ப்பின் படி வழக்கு சொத்தினை தேவையற்ற காரணமின்றி நீண்ட நாட்களாக காவல் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ வைத்திருக்க வேண்டியது இல்லை என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இரு தரப்பு வாதங்களை பரிசீலனை செய்ததில், மேற்கண்ட வழக்கு சொத்தினை மனுதாரருக்கு அத்தியாவசிய தேவைகளுக்கு தேவைப்படுவதாலும், எதிர்மனுதாரர் வழக்கு சொத்தினை ஏன் நிறுத்தி வைக்க வேண்டும் என்பதற்கான தகுந்த

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.09 19:21:51 +0530

காரணத்தினை குறிப்பிடாததாலும், வழக்கு சொத்தினை பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, இவ்வழக்கு சொத்தாக இந்நீதிமன்றத்தில் சி.பி.எண். 154/2021 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்ட தடயப்பொருளான TN 51 F 2083 என்ற பதிவெண் கொண்ட Bolero Camper 120 SC XL என்ற நான்கு சக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

அ) மனுதாரர் வாகனத்தின் அசல் RC Book நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும்,

ஆ) மனுதாரர் ரூபாய். 2,00,000/–க்கு சொந்த பிணையபத்திரம் கொடுக்க வேண்டும் என்றும்,

இ) இரண்டு தனிநபர் ஜாமீன் தலா ரூபாய்.10,000/–க்கு கொடுக்கவேண்டும் என்றும்,

ஈ) இவ்வழக்கு சொத்தின் புகைப்படத்தை பிரிவு 23, பாரதிய சாட்சிய அதிநியாம், 2023 சான்றிதழுடன் தாக்கல் செய்யவேண்டும் என்றும்,

உ) வழக்கு சொத்தை உருமாற்றம் செய்யவோ, பெயர் மாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ கூடாது என்றும்,

ஊ) மனுதாரர் பஞ்சநாமாக கொடுக்கவேண்டும் என்றும்,

**இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.09 19:21:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.